பட்டணாசெழும டைம

Q6:417
N23
186815

4

சேசு மரி சூசை துணை.

தூத்துக்குடி நகரில்

வந். திபூர்சியுஸ் ரோச்சு ஆண்டவர் அவர்கள்

மேற்றிராசனம் வகித்த

# பட்டாபிஷேகப் பாமாலை

இதில் அவரது ஜீவியசரித்திரம் முதலானதும் அடங்கியிருக்கின்றன.

இஃது

விஞ்சையோர் புகழும் தஞ்சை சித்திரக்கவி நாவலரும்

சத்தியவேதாகம பாகவதருமாகிய

## T. M. துரைசாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

திருச்சி உலக இரட்சகர் கோவிற் பங்கு சேசுசபைக் குருவாகிய

சங். A. தானியேல்நாத சுவாமி அவர்களால்

அங்கீகரிக்கப்பெற்று

ஷை-யூர் இரக்ஷகர்கோவில் பாடசாலை உபாத்தியாயர்

M. தோமாஸ்பிள்ளை அவர்களால்

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] [அணா 3.

இ[illegible] ரோச்சாண்டவர் அவர்கள் பட்டாபிஷேகத்தன்று அரங்கேற்றப்பட்டது.

1923.

8 - OCT 1923
MADRAS
Q6:417
N23
186815

9 OCT 192

A. M. D. G.

## வந் திபூர்சியுஸ் ரோச்சு ஆண்டவரவர்களின் ஜீவிய வரலாறு.

நம் இந்திய தேசத்திற்கே முதல் இந்திய மேற்றிராணியாராய் விளங்கித் துலங்கும், வந். பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச் ஆண்டவரவர்கள் தூத்துக்குடியெனும் புண்ணிய க்ஷேத்திரத்திலே, கீர்த்திவாய்ந்த க்ஷத்திரிய வம்ஸமெனும் பரதகுலத்திலே பிரபல்ய மகுடவர்த்தனராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜி. சி. ரோச் விக்டோரியா அவர்களின் கனிஷ்ட குமாரராய் அவதரித்தனர். இவர் 1879-ம் வருடம் ஏப்பிரல்-மீ 14-ம் தேதி, அர்ச். திபூர்சியார் திருநாளன்று ஜனனமானார். இவர் ஆறு சகோதரர்களுடனும், ஐந்து சகோதரிகளுடனும் பிறந்தவர். இவருடைய சகோதரர்களில் சங். கஸ்பார் ரோச் அவர்களும், சங். ஜோசப் ரோச் அவர்களும், குருக்களாகி தூத்துக்குடி புது மேற்றிராசனத்தில் உழைத்து வருகிறார்கள்.

திபூர்சியுஸ் ரோச் ஆண்டவர் அவர்களை அவரது ஐந்தாம் பிராயத்தில் அவரது தாய் தந்தையர்கள் முதல் முதல் இலங்கை அர்ச். ஆசீர்வாதப்பர் கலாசாலையில் கல்வி கற்க விடுத்தனர். அதன்பின்னர் சிலகாலம் சென்று ரோச் ஆண்டவர் அவர்கள், திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் வித்தியாப்பியாசம் செய்துவந்தனர். 1898-ம் ஆண்டு பெப்பிரவரி-மீ 5-ம் தேதி பரதகுலத்து முதல் சேசு சபையாராக ஷெம்பகனூர் நவசன்னியாச மடத்தில் பிரவேசித்து, வேதசாஸ்திரங்களைப் பயின்று வந்தார். அப்பால் திருச்சிமாநகரிலுள்ள அர்ச். சூசையப்பர் கலாசாலை வெளிமாணவர்களை மேல்பார்க்கும்படி நியமிக்கப்பட்டார். இவருடைய நற்குண நற்செயல்களைக்கண்டு பள்ளிப்பிள்ளைகள் அனைவரும் இவரை அன்புடன் நேசித்து, இவரை விட்டுப் பிரிய மனமில்லாமலிருந்தார்கள். மூன்று வருடம திருச்சியில் இருந்தபின், கர்சியாங் செயின்ட். மேரீஸ் குருமடம் சென்று, வேதசாஸ்திரங்களைப்படித்து முடித்து, 1910-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி இவர் குருப்பட்டம் பெற்றார். திரும்பவும் திருச்சிக்கு வந்து, உலக இரட்சகர் தேவாலயத்தில் சேசுசபை சங். தெ. கிருஞ்ச்நெவ் சுவாமியாருக்கு உதவிக் குருவாக அமர்ந்தார். 1913-ம் வருடம் சங். தெ. கிருஞ்ச்நெவ் சுவாமியார் பாரீஸ் நகர் மிஷன் புரோக்கியூரேட்டராக நியமிக்கப்பட்டபின், சுமார் ஒன்பதினாயிரம் கிறீஸ்துவர்களடர்ந்த அந்தப் பாரிப்

பங்கிற்கு இவரே பங்கு சுவாமியாராயும், ஆர். ஸி. எலிமெண்டரி பாடசாலைகளுக்கு மானேஜராயுமிருந்து, சென்ற பன்னிரெண்டு வருடகாலமாக உழைத்து கடைசியாக அர்ச். இஞ்ஞாசியார் ஞாபகார்த்தமாய் உலக இரட்சகர் தேவாலய காம்பவுண்டுக்குள் பதினோராயிர ரூபாய் பொருமானமுள்ள புதிய லோயோலா ஹால் என்னும் சிறப்புப் பெயர்தாங்கிய தியானசாலை ஒன்றைக் கட்டி, கிரஹோற்சவம் முதலானதும் செய்துமுடித்தனர். அத்தியானசாலையோ மாணவர்களுக்கு கலாசாலையாகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவர் திருச்சிஜங்ஷனுக்கு கிழக்குள்ள மஞ்சத்திடல் என்னும் ஸ்டேஷனுக்கடுத்த பாப்பாக்குரிச்சிக் கிராமத்தில் அர்ச். பிலோமினம்மாள் தேவாலயம் ஒன்றைக் கட்டிமுடித்து, திருச்சி மேற்றிராணியாராகிய வந். அகுஸ்தீன் பசாந்தியர் ஆண்டவர் அவர்களைக்கொண்டு பூசை முதலானதும் நடத்திவைத்திருக்கிறார். இவர் திருச்சிமாநகரில் அநாதப்பிள்ளைகளை பரிபாலித்தும், ஜீவனத்துக்கு வழியில்லாத விதவைகளையும், ஏழைக்குடும்பங்களையும் கண்காணித்தும் வந்திருக்கின்றனர். இவர் திருவாய் மலர்ந்தருளும் ஒவ்வொரு பிரசங்கங்களும் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிவதுபோல் அவ்வளவு இனிமையாயிருக்கும். இவர் சத்தியவேத சித்திர விளக்கம், நலலொழுக்கம், இஞ்ஞாசியார் தியான ஒடுக்கம் முதலான பல வேதபுத்தகங்களையும்தமிழில் மொழி பெயர்த்திக்கின்றனர். ஆகையால்தான் இவருக்கு "உலக இரட்சகர்கோவில் திலகம்" எனப்பெயர் வழங்கலாயிற்று. இவர் சேசு சபையில் சேர்ந்து 25-ம் வருடமாகிய 1923-ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 5-ம் தேதியன்று சில்வர் ஜுபிலி கொண்டாட்டம் திருச்சிமாநகர் உலக இரட்சகர் தேவாலய காம்பவுண்டுக்குள் நடைபெற்றது. அர்ச். சவேரியார் மனந்திருப்பிய முதற் கிறீஸ்துவர்களின் சந்ததியாராகிய இவர், நமது முதல் தமிழ மேற்றிராணியாராய்த் துலங்குகிறார். இவருக்குத் தூத்துக்குடியில் 1923-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 23-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மேற்றிராசனப் பட்டாபிஷேகச் சடங்கு வந். அகுஸ்தீன் பசாந்தியர் மேற்றிராணியார் அவர்களால் வெகு ஆடம்பரத்துடன் கொடுத்து நிறைவேறப்பெற்றது. இவரை நமது தேவ தாயார் நீடூழிகாலம் வாழும்படி கிருபை செய்ய நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக.

அருந்தமிழறிந்த அன்பர்களே! யான் எழுதியவற்றுள்ளும், பாடியவற்றுள்ளும் குற்றம் பலவிருத்தல் கூடும். ஆகையால் குற்றத்தைநீக்கி குணத்தை கிரகிக்கும்படி வேண்டுகிறேன்.

T. M. D.

ஆவணக காப்பக நூலகம்
சென்னை-600 0



8 - OCT 1923

விஞ்சையோர் புகழுந் தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், சத்தியவேதாகம பாகவதருமாகிய

**T. M. துரைசாமிபிள்ளை அவர்களால்**

இயற்றப்பெற்ற

# பட்டாபிஷேகப் பாமாலை.

## வந். ரோச்சு ஆண்டவர் அவர்களுக்கு வாழ்த்துதல்.

நாதனே ஏசுநாதனே என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி.

186815

பல்லவி.

வாழ்த்துவோம் ரோச்சு மாதவமா முனிவரே
வாழ்த்துவோம் நாங்கள் வாழ்த்துவோம் உம்மை (வாழ)

அனுபல்லவி.

சூஸ்திர தாரா சாஸ்திர தீரா
தொல்லுலகிலுதித்த தூயனே உம்மை
தோத்தரித்தடி பணிந்து (வாழ்)

பொறுமையின் கடலே அருமையிலுடலே
புண்யாவதாரா வுந்தன் பொற்பாதந் தனைப்
போற்றியே நமஸ்கரித்து (வாழ்)

பாரின்ப நீக்கி பேரின்ப நோக்கிப்
பத்திதனைத் தொடுத்த பாக்கியா யெம்மைப்
பட்சமாயாசிர் வதிக்க (வாழ்)

தரும குணாளா பரம தயாளா
தஞ்சை துரைசாமியின் சாஹித்யமதால்
சாற்றினே மமைப் புகழ்ந்து (வாழ்)

---

## வந். திபூர்சியுஸ் ரோச்சு ஆண்டவர் அவர்கள்

தூத்துக்குடியில் பிறந்து, திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலை மாணவராய் கல்விகற்றல்.

---

**நொண்டிச்சிந்து—புன்னாகவராளி.**

சொல்லுவோம் ஆண்டவராம்—ரோச்சு—சுபதினக்கொண்டாட்டந்தனைப் போற்றி—அல்லும்பகலும் நினைந்து—நாங்கள்—அன்புடன் தோத்தரித் தேற்றிடுவோம்—குவலய மேபுகழும்—தூத்துக்—குடிதனிற் பிறந்த பூமானும்—அவர் தந்தை சீமானும்—அவருக்—கன்புடன் பிள்ளைகள் பதினொருவர்—அவர்களில் திபூர்சியரும்—திருச்சி—அர்ச்சிஷ்ட சூசையப்பர் மடத்தில்—கல்வி பயின்றுவருங்கால்—இந்தக்—காசினி வாழ்க்கையோ மோசமெனக்—கண்டுளந்தான் கனிந்து—தொண்டு—கடவுளுக்கேதான் புரிவேனென்று—மனதில் வைராக்யமுடன்—பால்ய—வயதினில் எண்ணமும் கொண்டவராம்—தஞ்சை நகரில் வாழும்—எம்துரை—சாமிகவியாலும்மைக் கொண்டாடி—போற்றினோம் போற்றினோமே—எம்மை—புவிதனிலாசீர் வதிப்பீரோ.

---

## வந். திபூர்சியுஸ் ரோச்சு ஆண்டவர் அவர்கள்

தாய் தந்தை, பந்துக்களைவிட்டு நீங்கினதும் சேசு சபைக் குருவானதும், திருச்சி உலக இரட்சகர் கோவிற்கதிபதியாய் விளங்கினதும், ஆர். சி. எலிமேண்டரி பாடசாலைகளுக்கு மானேஜராய் துலங்கினதுமான விர்த்தாந்தங்கள்.

---

**பரமனையே பாடி பக்தி என்ற வர்ணமெட்டு.**

இராகம்—அமீர்கல்யாணி—தாளம்—ஆதி.

பல்லவி.

அருள்புரிவீர் ரோச்சு ஆண்டவரே நீர் (அரு)

அநுபல்லவி.

தருணம் தருணமென தந்தைதாயையும் விட்டு
கருணைபுரிய வந்தீர் கண்ணியா எம்மைத்தொட்டு (அரு)

தொஹறா

ஆயிரத் தெண்ணூர்த்தி தொண்ணூத் தெட்டாமாண்டு
பெப்பிரவரி ஐந்தாம் தேதி
சாயுச்சிய பதவியாய் சேசு சபைதனில் சேர்ந்த
சற்குருப்பிரசாதி

(அநுபல்லவியெடுப்பு.)

உற்றூர் உறவினர்கள் உமதருளால் விளங்க
சுற்றம் எளியவரும் சுகமுடனே துலங்க (அரு)

தொஹறா

உலக இரட்சகர் கோவிலுக் கதிபதியாயிருந்த
உத்தமஞான குருவே
அலகைதனை ஜெயித்துலகினில் துறவியாய்
ஆனதோர் புண்ய உருவே

(அநுபல்லவியெடுப்பு.)

அமிர்தவாசகா உந்தன் அருந்தவப் போதமே
சமரச சன்மார்க்க சத்திய வேதமே (அரு)

தோணைறு

அரியமங்கலம் குவளகுடி முதலான ஐயர்
எலிமெண்டரி ஸ்கூலுக்கெல்லாம்
பெரியதோர் மானேஜரொன்று விளங்கியே ஞான
பிரபுவானீர் பக்தருக்கெல்லாம்

(அநுபல்லவியேடுப்பு.)

விஞ்ஞையோர்கள் புகழும் தஞ்சைதுரைசாமியின்
செஞ்சொல் பதத்தாலுந்தன் தஞ்சமெனப்பணிந்தோம்-(அரு)

---

## வந். திரூர்சியுஸ் ரோச்சு ஆண்டவர் அவர்களின்

துறவறச் சிறப்பும், திருச்சிமாநகரில் சில்வர் ஜூபிலி
கொண்டாடின வைபவமும்.

---

## தெள்ளு தமிழுக்குதவும் சீலன் என்ற வர்ணமெட்டு.

இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

1. அன்புள்ள எங்கள் குருநாதா—ரோச்சு
ஆண்டவரென்னும் சத்ய போதா—நீரும்
இன்பமாய் எங்களது துன்பங்கள் நீங்கப்பிர
சங்கம் செய்த சிங்கம்

2. இல்லற மல்லலெண வெறுத்தீர்—தானே
இன்புறவே துறவறம் தரித்தீர்—அப்போ
நல்லறமல்லவென்று சொல்லவுந் தந்தைமொழி
மறுத்தீர் அறு வறுத்தீர்

3. செல்வமிகுந்த சீமான் பாலா—அருட்
செல்வமடைந்த தவ லோலா—ஞானக்
கல்விக் களஞ்சியமே வல்வினை போக்குமனு
கூலா ஜெய சீலா

4. சத்திய மின்னதென்று கண்டீர்—சேசு
சபையிலோர் குருவாகிக்கொண்டீர்—தெய்வ
சித்தத்திற் கொத்தவித மாகவேயித்தரையில்
சென்றீர் நிலை நின்றீர்

5. எங்கும் புகழுந்தயா நிதியாய்—உலக
இரட்சகர் கோவிற்கதி பதியாய்—நீரும்
தங்கியிருந்தீர் சுபமங்களமாய் திருச்சி
தானே தவக் கோனே

6. பத்தியிலும் புத்தியிலும் சிறந்தீர்—இந்தப்
பாரில் தூத்துக்குடிதனில் பிறந்தீர்—நல்ல
உத்தமசில்வர் ஜூபிலி உத்தமாகொண்டாடிடவே
கண்டோம் களி கொண்டோம்

7. சஞ்சல மகற்றும் ராஜரிஷியே—உம்மை
தரிசிக்கும் பேர்க்குவரும் குஷியே—சதா
நெஞ்சிரக்கம் கொண்டுபிர பஞ்சமதிலே தருமம்
செய்து வந்தீர் செய்து

8. நெஞ்ச மகிழஉம்மைப் போற்றி—நாங்கள்
நிதமும் பாடுவோம் கவிசாற்றி—புகழ்
தஞ்சை துரைசாமியின் செஞ்சொல்பத மூரைத்தோம்
தானே தவக் கோனே.

---

## வந்தனம்.

சாரங்கம் தன்னிலோர் என்ற வர்ணமேட்டு.

இராகம்—அடாணு—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

1. அந்தமாய் ரோச்சென்னும் ஆண்டவரைத்தினம் நாடி—நாம்
அன்புடன் போற்றியே வந்தனம் சாற்றுவோம் தேடி
விந்தையாய் சந்ததம் மைந்தர்கள் யாவரும்
விதிமுறையாய் மதியுடனே அதிவிரவில் கதிபெறவே (அந்த)

2. உலகில் மூவாசைதனை ஜெயிக்கவழி கண்டார்—நல்ல
உத்தம மேற்றிராசனந்தனையே கைக்கொண்டார்
கலகம் செய்யும் பெருமலகையும் ஓடிட
காணக்தினந் தோரணபூசை வேணபல வேபுரியும் (அந்த)

3\. சுந்தரம்சேர் தஞ்சைமாநகரின் துரைசாமி—அவர்
சுந்தரக்கவியை பாடினேமருள்வீர் சாமி
சிந்தையிலுந்தனை சிந்தித்தோம் பாலர்யாம்
சித்திபெற இத்தரையில் சத்தியெமக்கே யளிக்க (அந்த)

---

## மங்களம்.

வருவாயே அடைக்கலமாதாவே என்ற வர்ணமெட்டு.

இராகம்—சிந்து பைரவி—தாளம்—ஆதி.

பல்லவி.

ஜெய—மங்களமே சுப மங்களமே சொல்லிப்போற்றுவோம்
பலகவி சாற்றுவோம் மலரடி ஏற்றுவோம் (ஜெய)

அநுபல்லவி.

எங்களின் ஆண்டவராய் இலங்கும் பிரசாதா
எழிலமிர்தவாச ரொனும்ரோச்சு நாதா
திங்களைப்போலிருள் தனைப்போக்கும் நீதா
தீயர்கள் தீவினை தீர்க்குநற் போதா (மாஜெய)

எங்குமுமது பிரசங்கத்தைக் கோனே
இனிமையாய் கேட்டிடவருகிறூர் தானே
தங்குமித் தூத்து குடியதில் கோனே
சத்தியம்விளங்கியே தழைக்கிது தானே (மாஜெய)

தஞ்சையுறுதுரை சாமியும் பாட
தனயர்கள் நாங்களுந் தாளமும்போட
நெஞ்சமகிழ்ந்தும்மை நேயர்கள் கூட
நீணிலந்தனில் கொண்டாடியே பாட (மாஜெய)

---

Holy Redeemer's
30—9—1923.

Nihil obstat : A. DANIAL S. J., cens. dep.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186815
சென்னை-600 008

## ...துக்குடி சிறப்பு.

பத்தி ...திக்கவிடாது என்ற வர்ணமெட்டு.

இராகம்—பியாகு—தாளம்—ஆதி.

பல்லவி.

தூத்துக்குடி நகரைப் பாரீர்—அதன்
சுந்தரஞ் சொல்வேனிதோ கேளீர். (...

அநுபல்லவி.

பார்த்தோர் மகிழ்ந்திடுவார் பாரில் புகழ்ந்திடுவார்
பாக்கியமானதென்பார் சிலாக்கியங் காணுதென்பார். (...

சரணங்கள்.

கப்பற்றுறைமுகமே நீட்சி—பல
காந்த விளக்குகள் கண்காட்சி
செப்புந் தீபஸ்தம்பமோ சிங்காரமான மாட்சி
சிறியதோர் தீவிலது தெரிகிறதே சாட்சி (...

முத்துக்கு ரிக்குந் துறையுண்டு—அதில்
முழுகி எடுப்பார் சிப்பிகொண்டு
மெத்தவியாபாரிகள் சித்தமகிழ நின்று
நத்தி விலைகொடுத்து முத்துவாங்குவதுண்டு (தூத்து)

பஞ்சாபீஸ் ஆலைகள் பூந்தோட்டம்—பாரும்
பட்டினச்சாலைக ளோவாட்டம்
கொஞ்சும் விதேசியாரின் கொண்டாட்டமான கூட்டம்
கொஞ்சமல்லவேகண்டு அஞ்சல்செய்வ தொதேஷ்டம் (...

பரதகுலம் விளங்கும் நாடு—கூடி
பஜிப்பார்தினம் பஜனையோடு
சரத வியாபாரிகள் தங்கத்தகுந்த வீடு
சவரியார் வந்துவேதம் சாற்றிபோதித்த நாடு (தூத்து)

தஞ்சை துரைசாமியின் கீதம்—பாடி
சாற்றினேம் ரோச்சாண்டவர் பாதம்
அஞ்சிப் பணிந்துலகில் அறிவோம் சத்தியவேதம்
சஞ்சலம் நீக்கிடவே தருவா ரருட்பிரசாதம் (தூத்து)